விலை ரூபா: 10.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

பக்கங்கள்: நான்கு
சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 06 வியாழக்கிழமை (19.04.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 121

ராம்கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும்போது 150 உறுப்பினர்களை தொகுதிவாரி தேர்தல் முறையின் அடிப்படையிலும் 75 உறுப்பினர்களை விகிதாசார அடிப்படையிலும் தேர்ந்தெடுக்கும் புதிய தேர்தல் முறையை அடுத்தமாதம் முதல் பாராளுமன்றத்தில் முன்வைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த புதிய தேர்தல் முறையின் அடிப்படையில் நிலையான அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கமென சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளதாக லக்பிம செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த தேர்தல் முறையின் அடிப்படையில் பலவீனமான (04 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் ஆதரவுடன் மன்னிப்புச்சபை போராட்டம்

### அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சர்வதேச மன்னிப்புச்சபையினால் 'விதிகளின் அடிப்படையில் விளையாடுங்கள்' என்ற போராட்டமானது விடுதலைப்புலிகளின் ஆதரவுடன் நடத்தப்படுவதாக மனித உரிமைகளுக்கான அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளதாவது, சர்வதேச மன்னிப்புச்சபையினால் நடாத்தப்படும் போராட்டமானது இலங்கையின் நற்பெயரைக் கெடுக்கும் முகமாக அமைந்துள்ளது.

இந்தப் போராட்டம் அதிகளவில் பொது மக்களை (04 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை அரசு உடனடியாக ஏற்படுத்த வேண்டும்

## மூன்று தமிழ்க் கட்சிகள் கூட்டாகக் கோரிக்கை

(கொழும்பு)

மக்களின் அவல நிலைகளினையும் வன்முறைக் கலாசாரத்தினால் ஏற்பட்டு வரும் அழிவுகளையும் கருத்தில் கொண்டு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை அரசாங்கம் துரிதமாக முன்வைக்க வேண்டுமென மூன்று தமிழ்க்கட்சிகள் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளன.தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்,ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பத்மநாபா அணி ஆகிய மூன்று கட்சிகளும் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன. (04 ஆம் பக்கம் பார்க்க)

## இடம் பெயர்ந்த மட்டு.மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களை இரண்டரை மாதங்களுக்குள் மீளக்குடியமர்த்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தலைமையில் அமைச்சர்கள் றிசாட் பதியுதீன்,அமீரலி மற்றும் அரசாங்க அதிபர் உட்பட அதிகாரிகளுடன் அலரிமாளிகையில் நேற்று கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து கருத்து தெரிவித்த மீள் குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் றிசாட் பதியுதீன் மட்டக்களப்பு மாவட்டத்தில் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாடசாலைகளில் நிர்க்கதியாகவுள்ளனர். இவற்றினைவிட நண்பர்களின் வீடுகளிலும் உறவினர்களின் வீடுகளிலும் ஆயிரக்கணக்கான (04 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் மீதான அழுத்தத்தை குறைக்கவே ஜனாதிபதி மகிந்த வத்திக்கான் பயணம்

### இராஜ தந்திரத் தரப்புக்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

ஈஸ்டர் ஆராதனையின் போது பாப்பரசர் விடுத்த அழைப்பையடுத்து அரசாங்கத்தின் மீது ஏற்பட்ட சர்வதேச அழுத்தத்தை திசை திருப்பவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வத்திக்கானுக்கான விஜயத்தை அவசரமாக ஒழுங்கு செய்ததாக இராஜதந்திரத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக ஐரோப்பிய இராஜதந்திரி ஒருவர் மேலும் கூறியிருப்பதாவது, இம்மாதம் 8 ஆம் திகதி வத்திக்கானில் இடம்பெற்ற ஈஸ்டர் ஆராதனையின் போது இலங்கையின் இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முன்வருமாறு அழைப்பு விடுத்த பாப்பரசர் 16 ஆம் பெனடிற், இதன் மூலம் மாத்திரமே மேலும் இரத்தக்களறி ஏற்படுவதைத் தடுக்க முடியுமென (04 ஆம் பக்கம் பார்க்க)

## நாகர் கோயிலில் துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

நாகர் கோயில் முன்னரங்கப் பகுதியில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது. முன்னரங்கப் பகுதிக்குள் நேற்றுக் காலை 6 மணியளவில் உட்புக முயன்றபோதே அவரின் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

## வவுனியாவில் குண்டு வெடிப்பு

(வவுனியா)

வவுனியா இரட்டைப் பெரியகுளம் பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றிரவு 8.15 மணியளவில் குண்டு வெடிப்பொன்று இடம் பெற்றுள்ளது.

இக் குண்டு வெடிப்பின்போது சேதம் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-3)

## டெய்லிமிரர் பத்திரிகை ஆசிரியருக்கு பாதுகாப்புச் செயலாளரால் மிரட்டல்

(கொழும்பு)

கருணா குழுவினர் தொடர்பான செய்திகளை வெளியிட வேண்டாமென கொழும்பிலிருந்து வெளிவரும் டெய்லிமிரர் ஆசிரியருக்கு பாதுகாப்புச் செயலாளரினால் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

டெய்லி மிரர் பத்திரிகையில் அண்மையில் கருணா குழு தொடர்பாக வெளியிடப்பட்ட கட்டுரை தொடர்பாக அதன் பத்திரிகை ஆசிரியர் சம்பிக்க லியனாராச்சி, கோத்தபாய ராஜபக்ஷவினால் மிரட்டப்பட்டுள்ளார்.

கிழக்கில் கருணா குழுவின் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை இந்த பத்திரிகை வெளியிட்டு வருவது தொடர்பாக கோத்தபாய வருத் (04 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் நேற்றும் விமானத் தாக்குதல்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மற்றும் கிளிநொச்சி கிழக்கு ஆகிய பகுதிகளில் அடையாளம் காணப்பட்ட விடுதலைப்புலிகளின் இலக்குகள் மீது நேற்றுக் காலை விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் நேற்றுக் காலை 10.15 மணியளவில் விமானத் தாக்குதலை நடத்தியுதாக விமானப்படைப் பேச்சாளர் குறூப் (04 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருட்களின் விலை நேற்று முதல் அதிகரிப்பு

(கொழும்பு)

எரிபொருட்களின் விலை நேற்று நள்ளிரவு முதல் அதிகரித்துள்ளதாக பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவர் அஜந்த டி மெல் தெரிவித்துள்ளார். டீசலின் விலை 3 ரூபாவினாலும், மண்ணெண்ணெயின் விலை 2 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

புதிய விலைகளின் அடிப்படையில் ஒரு லீற்றர் டீசலின் விலை 63 ரூபாவாகவும், மண்ணெண்ணெயின் விலை ஒரு லீற்றர் 50 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவுள்ளதாக பெற்றோலிய (04 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வே தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது

### நோர்வே தூதரக அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வே தொடர்ந்தும் ஈடுபாட்டுடனேயே செயற்பட்டு வருகின்றது. இந்நிலையில் நோர்வே தொடர்பான சிங்கள மக்களின் எண்ணப்பாடு குறித்து நாம் எவ்வித கருத்துக்களையும் கூற முடியாதுஎன கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சமாதான செயற்பாடுகளில் நோர்வேயின் ஈடுபாடு குறைந்துள்ளதாக கருத்து நிலவுகின்றமை, நோர்வேயின் மத்தியஸ்தம் தொடர்பில் சிங்கள மக்களின் அபிப்பிராயம் தொடர்பாக வினவியபோதே (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த இத்தாலி பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது தூதுக்குழுவினரும் நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று இத்தாலி பயணமானார்கள்.

இத்தாலி புறப்பட்டுச் செல்லும் ஜனாதிபதியையும் தூதுக் குழுவினரையும் வழியனுப்பி வைப்பதற்காக இலங்கையிலுள்ள வத்திக்கான் தூதுவர் அருட்திரு.மாரியோ செனாரி கட்டுநாயக்கா (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

## அசத்தல் வெற்றி பெற்றது இலங்கை ஆறுதலுடன் விடைபெற்றது அயர்லாந்து

அயர்லாந்தை 8 விக்கெட்டுக்களால் அசத்தலாக வெற்றி பெற்றது இலங்கை அணி. மேற்கிந்தியத் தீவுகளில் இடம்பெற்று வரும்உலகக் கிண்ணத் தொடரில் நேற்று கிரேட்டாவில் நடைபெற்ற சூப்பர் 8 ஆட்டத்தில் அயர்லாந்து - இலங்கை அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி மகரூப், முரளியின் துல்லியமான பந்துவீச்சில் 27.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஜெறிமி பிறே 20 ஓட்டங்களையும் ஸிமித் 18 ஓட்டங்களையும் மற்றும் போட்டோபீல்ட் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக பர்வேஷ் மகரூப் மற்றும் முரளிதரன் ஆகியோர் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 78 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி மஹேல, சனத்தின் அதிரடியில் 10 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களையிழந்து 81 ஓட்டங்களைப் பெற்று 8விக்கெட்டுக்களால் அசத்தல் வெற்றி பெற்றது. இதில் மஹேல ஜெயவர்த்தன 39 ஓட்டங்களையும் சனத் ஜெயசூரியா 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

போட்டியில் தோல்வியடைந்த அயர்லாந்து அணி சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அறிமுகமாகி உலகக் கிண்ணத் தொடரில் பலம்வாய்ந்த பாகிஸ்தான், ஸிம்பாவே அணிகளை வெற்றி பெற்று சூப்பர் 8க்கு முன்னேறி பங்களாதேஷ் அணியை வெற்றி பெற்று ஆறுதலடைந்து விடைபெற்றது. (ச-5)

## அரையிறுதியில் ஆஸி-தென்னாபிரிக்கா; நியூசிலாந்து – இலங்கை மோதும்!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் தற்போது சூப்பர் 8 ஆட்டம் நடைபெற்று வருகின்றது. இதில் நடப்புச் சம்பியனான அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இலங்கை ஆகிய மூன்று நாடுகள் ஏற்கனவே அரையிறுதிக்குத் தகுதி பெற்றன. நாலாவது நாடு எது என்பது நேற்று முன்தினம் போட்டி முடிவில் தெரிய வந்தது.

இங்கிலாந்தை 9 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியதால் தென்னாபிரிக்கா அரையிறுதிக்குத் தகுதிபெற்றது. இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், அயர்லாந்து, பங்களாதேஷ் அணிகள் போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டன.

ஒரு அரையிறுதியில் சூப்பர் 8சுற்றில் முதலிடத்தைப் பிடிக்கும் அணி 4-வது இடத்தைப் பிடிக்கும் அணியுடன் மோதும். தற்போது அவுஸ்திரேலியா 12 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. தென்னாபிரிக்கா 8 புள்ளிகளுடன் 4-வது இடத்தில் உள்ளது.

இதனால் இந்த இரு அணிகளுக்கும் அரையிறுதியில் மோத வாய்ப்புள்ளது. மற்றொரு அரையிறுதியில் நியூசிலாந்து -இலங்கை அணிகள் மோதும் நிலை ஏற்பட்டுள்ளது. எஞ்சிய 4 ஆட்டங்களைப் பொறுத்து இறுதி செய்யப்படும்.

அவுஸ்திரேலியா கடைசி ஆட்டத்தில் நியூசிலாந்துடன் மிகவும் மோசமாகத் தோற்றால் மாற்றம் அடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-5)






## பொய்ப் பிரசாரங்களை மேற்கொள்ளும் இராஜதந்திரிகள் மீது கடும் நடவடிக்கை

### அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல எச்சரிக்கை



(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச ரீதியில் பொய்யான பரப்புரைகளை மேற்கொள்ளும் இராஜதந்திரிகள் தொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய பாதுகாப்புப் பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் நிலைமைகள் தொடர்பில் சில ராஜதந்திரிகள் தவறான தகவல்களை வெளியிட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். இந் நடவடிக்கைகளினால் இலங்கையின் நற்பெயருக்கு பாரிய அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர்இந்தக்கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இதேவேளை யாழ்ப்பாணத்திற்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களை அனுப்பி வைக்கும் அரசாங்கத்தின் செயற்திட்டம் வெற்றியளித்துள்ளதாகவும் அங்கு தொடர்ந்து பொருள்களை அனுப்பி வைப்பதற்காக வர்த்தகர்கள் சிலர் அரசாங்கத்துடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-3)

## ஜனாதிபதியின் சகோதரர் என்பதாலா கோத்தபாய மீது நடவடிக்கை எடுக்கவில்லை?

### லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. கேள்வி

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானத் தளத்தில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளாததன் காரணமாக அங்கு இடம்பெற்ற புலிகளின் விமானத் தாக்குதலுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக அரசாங்கம் ஏன் இதுவரை ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவில்லை? என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வி எழுப்பியுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் சகோதரர் என்ற காரணத்திற்காகவா அவருக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதுள்ளது என்றும்அவர் கேள்வி எழுப்பினார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த புதுவருடத் தினத்தன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காகக் கடமைக்குச் சமுகமளிக்காத தங்காலையைச் சேர்ந்த பொலீஸார் மற்றும் ஊர்காவற்படை வீரர்கள் 25 பேர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அதேபோன்று அண்மையில் அம்பாறையில் இடம்பெற்ற பஸ் குண்டு வெடிப்பின் போது கடமையில் ஈடுபட்டிருந்த ஐந்துபொலிஸார் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தமது கடமையை மீறுகின்ற அதிகாரிகள் மீதுஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது சரியானதாகும். ஆனால் இந்த செயற்பாடு நாட்டின் அனைத்து மட்டத்திலும் செயல்படுத்தப்பட வேண்டும்.

அண்மையில் கட்டுநாயக்கா விமானத் தளத்திற்கு அரசாங்கம் போதிய பாதுகாப்பினை வழங்காமையினால் புலிகள் விமானத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்நிலையில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இந்தச் சந்தர்ப்பத்திற்குப் பொறுப்புக் கூற வேண்டும். ஆனால் சாதாரண அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரசாங்கம் தனது பொறுப்பையும் கடமையையும் மீறியுள்ள கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. (ச-5)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் இசை, நடனம், இசைக் கருவிகள் கற்பதற்கு நேர்முகப் பரீட்சையில் தோற்றி அனுமதி பெறாத மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இணுவில் திகழ் கல்வி நிலையத்தில் நாளைக் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில், பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (எ)

## படகு கவிழ்ந்ததில் 3 பெண்கள் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் சந்தி வெளிகாப்பு பிரதேசத்தில் படகொன்று கவிழ்ந்ததில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச் சம்பவத்தில் கொல்லப்பட்ட மூவரும் பெண்கள் என ஏறாவூர் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் ஏறாவூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (ச-3)

## பயண ஏற்பாடு பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலகத்தில் பதிவு செய்த பிறமாவட்டங்களில் கடமை புரியும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கான பயண ஏற்பாடுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே மேற்படி அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அன்று காலை 7 மணிக்கு பயண ஏற்பாடுகளுடன் யாழ்.புகையிரத நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

## கிராம உத்தியோகஸ்தர் பதவி நியமனம் புள்ளியின் அடிப்படையில் வழங்கப்படும்

### பொது நிர்வாக அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

கிராம உத்தியோகஸ்தர் பதவி நியமனம் பெற்றுத் தருவதாக விஷமிகள் சிலரால் அளிக்கப்பட்டு வரும் வாக்குறுதிகளை நம்பி பணத்தை வழங்க வேண்டாமெனபொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற கிராம உத்தியோகஸ்தர் நியமனத்திற்கான போட்டிப் பரீட்சையை ஆதாரமாகக் கொண்டு வெற்றிடமாகவுள்ள இடங்களுக்கான கிராம உத்தியோகஸ்தர் பதவிக்கான நியமனத்தைப் பெற்றுத் தருவதாகக் கூறி ஒரு சில பிரதேசங்களில் விஷமிகள் சிலர் பணம் அறவிட்டு வருவதாக அமைச்சுக்கு முறையிடப்பட்டுள்ளதையடுத்து இவ்வறிவித்தலை அமைச்சு விடுத்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 10 ஆம் திகதி பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட இப் போட்டிப் பரீட்சைக்கு 2 லட்சத்து 85 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றினர்.

வெற்றிடமாகவுள்ள ஆயிரத்து 950 கிராம உத்தியோகஸ்தர் நியமனத்திற்கான தெரிவுகள் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலும் மற்றும் அரசாங்கப் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் நிபந்தனைகளின் அடிப்படையிலும் இடம்பெறும்எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## வேலை வாய்ப்புக்களைப் பெறக் கூடிய ஒப்பந்தத்தில் நோர்வே கைச்சாத்திடும்

நோர்வேயில் இலங்கையருக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும் புதிய ஒப்பந்தம் ஒன்றில் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் கைச்சாத்திடவுள்ளது.

நோர்வேயின் சார்பில் அந் நாட்டு வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு நிறுவனம் கைச் சாத்திடவுள்ளது. இதன்மூலம் 300 பேருக்கு வேலை வாய்ப்புப் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழில் வாய்ப்புக்களைப் பெண்களுக்குப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் எல்.கே.றுகுணுகே தெரிவித்துள்ளார். இதனைத் தவிர ஐரோப்பிய நாடுகளில் இலங்கைப் பெண்களுக்குத் தொழில் வாய்ப்பைப் பெறும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை இஸ்ரேலில் வேலை வாய்ப்பை விரிவுபடுத்தும் செயற்திட்டம்ஒன்றும் நடைபெற்று வருவதாக அவர் கூறியுள்ளார். (ச-3)

## இயல்பு வாழ்க்கை ஏற்படுத்துவது குறித்து வவுனியாவில் நேற்று உயர்மட்டக் கூட்டம்

(வவுனியா)

வவுனியாப் பிரதேசத்தில் இடம்பெற்று வரும் கொலைச் சம்பவங்கள், வன்முறைகள், நகரப் பகுதிகளை வெகுவாகப் பாதிக்கும் இறுக்கமான செயற்பாடுகள் என்பவற்றை நிறுத்தி பொதுமக்கள் இயல்பாக வாழ்க்கை நடாத்தக் கூடிய நடவடிக்கையை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வரவேண்டுமென வவுனியா அரச செயலகத்தில் நேற்று நடைபெற்ற உயர்மட்டக் கூட்டம் ஒன்றில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த இருவாரங்கள் மட்டும் தமிழ்-சிங்களம் ஆகிய இரு இனத்தவரையும் சேர்ந்த 24 பேர் அப்பகுதியில் கொல்லப்பட்டுள்ளனர். இதனையடுத்து இக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. வவுனியா செயலகத்தில் அரச அதிபர் எஸ்.சண்முகம் தலைமையில் நடைபெற்ற உயர் மட்டக் கூட்டத்தில் பல தரப்பட்டவர்கள் கலந்துகொண்டதுடன், தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இக் கூட்டத்தில் விபரமாக எடுத்துக் கூறியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-3)

## காப்புறுதி முகவர் பரீட்சை

ஐ.பி.எஸ்.எல். நிறுவனத்தால் நடாத்தப்படும் காப்புறுதி முகவர் பரீட்சைக்கு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுஸ்தாபனத்தில் விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது என இலங்கை காப்புறுதி கூட்டுஸ்தாபனத்தின் முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ச)

நாம் செய்யும் காரியங்கள் எல்லாம் எப்போதும் அதிகமாக யாதொரு இடையூறுமின்றி நடைபெற வேண்டும் என்று எண்ணினால் நாம் உலகத்தில் எந்தக்காரியத்தையும் செய்து முடிக்க மாட்டோம். —ராஜாஜி

வலம்புரி

# ஐக்கிய தேசியக் கட்சியின் யதார்த்த பூர்வமான அறிவிப்பு

அரசும் விடுதலைப்புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தால் அதற்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

நாட்டின் பிரதான கட்சி என்ற வகையில், சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆதரவு அளிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி விடுத்த அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

கடந்த இருபது வருட காலமாக இடம்பெற்று வரும் யுத்தத்திற்கு முடிபு கட்ட வேண்டிய காலம் வந்து விட்டதெனக் கூறும் ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் ஒருபோதும் தீர்வு காண முடியாது எனவும் வலியுறுத்திக் கூறியுள்ளது.

நாட்டின் இரு பிரதான கட்சிகளில் ஒன்றாக இருக்கக் கூடிய ஐக்கிய தேசியக் கட்சி, யுத்தத்தின் மூலம் இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாதென தெட்டத்தெளிவாகக் கூறியிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

எனினும் இருபது வருடத்திற்கு மேலாக நடைபெற்று வரும் யுத்தத்தில் இதுவரை அழிவைத் தவிர வேறு எதனையுமே அடைந்து கொள்ள முடியாமல் இருக்கும் போது, யுத்தத்தின் மூலம் வெற்றியடைய முடியுமென்றவாறு கருத்தை வெளியிடும் அரசியல்வாதிகள் இன்னமும் இந்த நாட்டில் இருக்கின்றார்கள் என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

எதுவாயினும் யுத்தத்தின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாதென்பதும், சமாதான முயற்சிக்கு முழுமையான ஆதரவை வழங்குவோம் என்பதும் ஐக்கிய தேசியக் கட்சியின் யதார்த்த பூர்வமான அறிவிப்பாகும்.

ஓர் நாட்டின் பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் மேற்போந்த அறிவிப்பு பாராட்டப்பட வேண்டியதாயினும் இதனை வெறும் அறிவிப்புடன் மட்டும் நிறுத்தி கொள்ளாமல் சமாதானப் பேச்சுவார்த்தை நடைமுறையில் சாத்திய மாகும் வண்ணம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அந்தக் கட்சியின் கடமையாகும்.

நாட்டின் கடந்த கால வரலாற்றில் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் - சமாதானப் பேச்சுவார்த்தையில் எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஆளுந்தரப்பிற்கு ஏற்படவிருந்தது.

ஆனால் இப்போது நிலைமை அது அல்ல. நாட்டின் பிரதான எதிர்க்கட்சி சமாதான முயற்சிக்கு பூரண ஆதரவு வழங்குவதாக அறிவிக்கின்றது. ஆளுந்தரப்போ யுத்தத்தில் நம்பிக்கை கொண்டுள்ளது.

இவ்விதம் காலத்திற்குக் காலம் மாறும் அரசியல் நச்சு வட்டத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு சமாதானத்தை விரும்புவோர் முன்வர வேண்டும். அப்போதுதான் விரும்பியோ விரும்பாமலோ சமாதானத்தை அடைய முடியும்.

இதனைவிடுத்து சமாதானம், பேச்சுவார்த்தை என்பன வெறும் வார்த்தைகளுடன் உறவாடுவதாக இருந்தால் அதனால் எந்தப் பயனுமே ஏற்பட மாட்டாது.

# அவுஸ்திரேலியாவில் அடைக்கலம் கோரியுள்ள தமிழர்களை அமெரிக்காவில் குடியேற்ற முடிபு

அவுஸ்திரேலியாவில் சட்டவிரோதமாகப் பிரவேசித்து அடைக்கலம் கோரிய 83 தமிழர்களையும் அமெரிக்காவில் குடியேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாகத் தெரியவந்திருக்கின்றது.

புதிய உடன்படிக்கை ஒன்றின் அடிப்படையிலேயே இதற்கான திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாக அவுஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் 'த அவுஸ்திரேலியன்' என்ற நாளேடு செய்தி வெளியிட்டிருக்கின்றது.

அவுஸ்திரேலியாவில் அடைக்கலம் கோரியிருக்கும் இவர்களை அமெரிக்காவில் குடியேற்றுவதற்கும் அதற்குப் பதிலாக குவந்தனாமோ குடாவில் உள்ள கியூபா நாட்டு அகதிகளை அவுஸ்திரேலியாவுக்குக் கொண்டு வரவும் புகலிடம் கோருவோர் பரிமாற்றம் என்னும் உடன்படிக்கையின் மூலம் ஜோன் ஹவாட் அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் புதிய திட்டத்தின் பிரகாரம் அவுஸ்திரேலியாவுக்கும் அமெரிக்காவுக்கும் வருடந்தோறும் 200 புகலிடம் கோரும் மக்களைப் பரிமாற்றிக் கொள்ள முடியும். இது அங்கீகாரம் அற்ற படகு மூலம் வந்தவர்களை எமது நாட்டுக்குள் அனுமதிக்க மாட்டோம் என்ற அவுஸ்திரேலியாவின் குடிவரவுத்துறை அமைச்சர் ஹெவின் அன்றூவின் கருத்துக்கு வலுச் சேர்ப்பதாகவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்நடவடிக்கையின் பிரகாரம் அமெரிக்கா செல்லும் முதலாவது அணியில் சிறிய பசுபிக் தீவான நௌருவில் தங்க வைக்கப்பட்டுள்ள புகலிடம் கோரிய 83 ஈழத்தமிழர்களும் பர்மிய நாட்டைச் சேர்ந்த 8 பேரும் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மீளக் குடியமர்வு உடன்பாடானது முதலில் அவுஸ்திரேலியாவுக்கும் வேறு ஒரு நாட்டிற்குமிடையேமேற்கொள்ளப்பட்டிருந்தது. பின்னர் இது அவுஸ்திரேலியா நௌரு, பப்புவா நியூக்கினியா, இந்தோனேசியா போன்ற நாடுகளிலுள்ள அடைக்கலம் கோரிய மக்களையும் பரிமாற்றக் கூடியதாக விரிவாக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கை புகலிடம் கோருவோர் தொடர்பாக மிகவும் முக்கியமான பிரச்சினையை எதிர்நோக்கும் நாடுகள் அரசியல் இலாபம் தேட உதவும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# தமது பிரதிநிதிகளுக்கு விசா வழங்காமைக்கு சர்வதேச மன்னிப்புச் சபை கடும் கண்டனம்

(கொழும்பு)

எமது பிரதிநிதிகளை இலங்கைக்குச் செல்லவிடாமல் இலங்கை அரசாங்கம் தடுப்பதன் மூலம் அது எதனையோ மறைக்க முயல்கின்றது என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்று வரும் மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய்வதற்கு என அங்கு சென்றிருந்த சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் இருவருக்கும் பிரித்தானியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் விசா வழங்க மறுத்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை தொடர்பாக மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்திய இணைப்பாளர் றொப் கோடன் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்கத்தின் இந் நடவடிக்கை அது எதனையோ மறைக்க முயல்வதனைக் காட்டுகின்றது. எமது பிரதிநிதிகளின் பயணத்தைத் தடுக்க இதனை விட வேறு காரணங்கள் இருக்க முடியாது.

எமது போராட்டம் இலங்கை துடுப்பாட்ட அணியை நோக்கியது அல்ல. சர்வதேச மனித உரிமை கண்காணிப்பாளர்களை எல்லாத் தரப்பும் அனுமதிக்க வேண்டும் என்பதே என்றார் அவர்.

நாம் எல்லாத் தரப்பினராலும் மீறப்படும் மனித உரிமைகள் தொடர்பாகவே கவனம் செலுத்தி வருகின்றோம். அங்கு பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர், கடத்தப்படுகின்றனர், காணாமல் போகச் செய்யப்படுகின்றனர்.

இது தினமும் அரசாங்கப் படையினர், கருணா குழுவினர், ஏனைய ஆயுதக் குழுக்கள், விடுதலைப்புலிகள் போன்றவர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இது தொடர்பாக எந்தத் தரப்பினரும் கவனம் செலுத்தவில்லை என்பது எமக்கு வெளிப்படையாகத் தெரிகின்றது.

அதாவது எல்லாத் தரப்பினரும் பொதுமக்களை பாதுகாக்கும் சர்வதேசத்தின் விதிகளை மீறியுள்ளனர் என்று மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளர் பூர்னா சென் தெரிவித்துள்ளார். (ஏ-1)

# மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அலட்சியமாக உள்ளது

## ஹியூமன் றைட்ஸ் வோற்ச் பாப்பரசருக்குக் கடிதம்

(கொழும்பு)

அமெரிக்காவின் நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் பாதுகாப்புத் தொடர்பான முன்னணி சர்வதேச அமைப்பான ஹியூமன் றைட்ஸ் வோற்ச் அமைப்பு இலங்கையில் அண்மைக்கால மனித உரிமை மீறல்கள் தொடர்பான விரிவான விபரங்கள் அடங்கிய கடிதம் ஒன்றை பரிசுத்த பாப்பரசருக்கு அனுப்பியுள்ளது.

இலங்கையில் ஆயுதப் பிணக்குகளில் ஈடுபட்டுள்ள தரப்பான அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் சாதாரண பொதுமக்களின் பாதுகாப்பைப் புறக்கணித்து அலட்சியப்படுத்தி நடந்து கொள்வதாக ஹியூமன் றைட்ஸ் வோற்ச் அமைப்பு தெரிவித்துள்ளது.

இவ்வமைப்பு பாப்பரசருக்கு அனுப்பியுள்ள அக் கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இத்தாலி விஜயத்தின் போது பாப்பரசர் அவரை சந்திக்கும் இடத்து இலங்கையில் இடம்பெற்று வரும் பெருந்தொகையான மனித உரிமை மீறல்களுக்குள் மிக முக்கிய சில விடயங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு தேவையான உத்தரவாதத்தினை ஜனாதிபதியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும் அல்லது இவை குறித்த பாப்பரசரின் ஆழ்ந்த அவதானத்தை எடுத்துக் கூறவோ முன்வருமாறு அக் கடிதத்தில் பாப்பரசருக்கு இவ்வமைப்புக் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது இடம்பெற்று வரும் மோசமான மனித உரிமை மீறல்களை விசாரிக்கவும் கண்காணிக்கவும் ஐக்கிய நாடுகள் சபையினால் நிறுவப்படும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் இலங்கைக்கு அவசியம் என்று தெரிவித்துள்ள இவ் அமைப்பு, இவ்வாறான சர்வதேச கண்காணிப்பாளர்களை இலங்கைக்கு அனுப்புவது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தினைச் சேர்ந்த பல நாடுகள் தமது ஆதரவினை பகிரங்கமாகத் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. (ச-5)

# சிங்கள மக்களை தவறாக வழிநடத்த அரசாங்கம் முயன்று வருகின்றது

## சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கமானது சிங்கள மக்களைத் தவறான வழியில் நடத்துகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

59.2வீதமான சிங்கள மக்கள் இராணுவத் தீர்வு மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்கலாம் என தமது வாக்கெடுப்பில் தெரிவித்ததாக கொள்கை வகுப்புத் திட்ட கற்கைக்கான ஆய்வு நிலையம் அண்மையில் வெளியிட்டிருந்தது.

இது தொடர்பாக கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவித்துள்ள சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்தக் கற்கை நிலையத்தின் வாக்கெடுப்பு முடிபுகள் பெரும்பாலும் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கத்தின் பொய்ப் பிரசாரங்களினால் ஏற்பட்டவையே.

இது சிங்கள மக்களின் அபிப்பிராயம் அல்ல. தற்போதைய அரசாங்கம் சிங்கள மக்களின் மனநிலையை மாற்றியுள்ளது. உண்மையாக இப்படியான கருத்துக்கள் கிழக்கில் இடம்பெற்று வரும் மோதல்கள் தொடர்பாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் போலியான பரப்புரைகளினால் ஏற்பட்டவையே.

கிழக்கில் தாம் தொடர்ந்து வெற்றி பெற்று வருவதாகவும் பெருமளவான விடுதலைப்புலிகளை கொன்றுள்ளதாகவும் அதிகளவான ஆயுதங்கள் மற்றும் நிலப்பரப்புக்களை மீட்டுள்ளதாகவும் அரசாங்கம் தொடர்ந்து பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றது.

இது சிங்கள மக்களின் மன நிலையைப்பாதித்துள்ளது. எனவே அவர்கள் இனப்பிரச்சினைக்கு இராணுவ வழிகள் மூலம் தீர்வைக் காணலாம் என எண்ணுகின்றனர். இந்தக் கருத்துக் கணிப்பை நம்பி அரசாங்கம் முழு அளவிலான போரை மேற்கொள்ளுமாகவிருந்தால் அது அவர்களின் பேரழிவுக்கே வழிவகுக்கும் என்றார் அவர்.

இந்த ஆய்வு நிலையத்தின் கருத்துக் கணிப்பில் சிங்கள மக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் பின்பற்றப்படும் உத்திகளை ஏற்றுக் கொள்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சுக்களின் மூலமாக இனப்பிரச்சினைக்கான தீர்வை நிராகரித்திருப்பதாகவும் தெரிவித்திருந்தது. எனினும் இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி கருத்து எதனையும் இதுவரை கூறவில்லை. (ச-5)

# புலிகளுக்கு நிதியும் ஆயுதங்களும் செல்வதைக் கண்காணித்து வருகிறோம்

## இத்தாலிய வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு நிதியும் ஆயுதங்களும் சென்றடைவதை இத்தாலியும் அமெரிக்காவும் இணைந்து கண்காணித்து வருகின்றன. ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்டங்களுக்குட்பட்டவாறு போதைப் பொருட்கள், முறையற்ற வியாபாரம் ,பணம் தொடர்பான முறையற்ற நடவடிக்கைகள் என்பவற்றுக்கு எதிராக இலங்கை மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஆதரவினை வழங்குவதாக இத்தாலிய அரசாங்கத்தின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரும் இத்தாலிய உப பிரதம அமைச்சருமான மெசி மோ டி அலேமா தெரிவித்தார்.

இத்தாலிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு அலுவல்கள், அமைச்சர் ரோஹித போகொல்லாகம அமைச்சர் மெசி மோ டி அலேமாவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு கருத்துத் தெரிவித்த இத்தாலிய அமைச்சர் மெசி மோ டி அலேமா மேலும் கூறுகையில், சிவிலியன்கள் மீதான கண் மூடித்தனமாக தாக்குதல்கள் உட்பட பயங்கரவாதத்தின் சகலவிதமான தன்மைகளையும் இத்தாலி கண்டிக்கின்றது.

உள்ளூர், ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்டங்களுக்குட்பட்டவாறு போதைப்பொருட்கள், பணம் தொடர்பான முறையற்ற நடவடிக்கைகள் என்பவற்றுக்கு எதிராக இலங்கை மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குவோம்.

வதிவிடம் இழந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை செய்ய இலங்கை அரசாங்கத்துடன் மிக நெருக்கமாகச் செயற்படுவோம். தேவைப்படும் இடத்து இலங்கைக்கு மனித நேயக்குழுவை அனுப்பத் தயாராக இருக்கின்றோம் என்று கூறினார்.

இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் போகொல்லாகம இலங்கையின் பயங்கரவாதத்தின் எச்சரிக்கைகளுக்கு முகம் கொடுக்கும் அதே வேளையில் ஜனநாயக விழுமியங்களைக் கட்டிக்காக்கும் சவால்களை பற்றி இத்தாலிய வெளிவிவகார அமைச்சரிடம் சுட்டிக்காட்டினார். (ச)

### இலங்கையின் சமாதான...

அவ்வதிகாரி இவ்வாறு தரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது, இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் அழைத்ததன் பேரிலேயே நோர்வே சமாதான செயற்பாட்டில் மத்தியஸ்தராக செயற்பட முன்வந்தது. தற்போது சமாதான செயற்பாட்டில் நாம் ஈடுபாட்டுடன் இல்லை என்று கூறுவது தவறானது.

முன்னர் இருந்த அதே ஈடுபாட்டுடனேயே நோர்வே தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது. எனவே சிங்கள மக்கள் கருத்துக்கணிப்பில் தெரிவித்திருக்கும் அபிப்பிராயம் தொடர்பாக நாம் கருத்து தெரிவிக்க முடியாது. சமாதான செயற்பாடுகளில் மத்தியஸ்தமானது மிகவும் முக்கியமானது. இலங்கையின் சமாதான முயற்சிகள், அபிவிருத்திப்பணிகள் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் நோர்வே தொடர்ந்தும் உதவியளித்து வருகின்றது என்றார். (ச-5)

### ஜனாதிபதி...

விமான நிலையத்துக்கு சென்றிருந்தார்.

இந்நான்கு நாள் விஜயத்தின் போது ஜனாதிபதியும் தூதுக் குழுவினரும் இத்தாலி ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரைச் சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளனர். அத்துடன் பாப்பரசர் 16 ஆவது ஆசீர்வாதப்பரை வத்திக்கானில் தரிசிக்கவுள்ளனர்.

இச் சந்தர்ப்பத்தில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் நிலவும் தற்போதைய நிலைமை குறித்தும் அது தொடர்பில் அரசாங்கம் இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் பாப்பரசருக்கு ஜனாதிபதி விளக்கிக் கூறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

### எரிபொருட்களின்...

கூட்டுத்தாபனத் தலைவர் மேலும் கூறியுள்ளார்.இதேவேளை இந்திய ஓயில் நிறுவனமும் டீசலின் விலை யை நேற்று நள்ளிரவு முதல் 3 ரூபாவினால் அதிகரித்துள்ளது. பெற்றோலின் விலையில் எவ்வித மாற்றமும் இல்லை. (ச-3)

### முல்லைத்தீவில்...

கப்டன் அஜந்த டி சில்வா தெரி வித்தார்.

இத் தாக்குதலில் விடுதலைப்புலிகளின் தொடர்பாடல் பிரிவு முழுமையாக சேதமடைந்துள்ளதாகவும் அவர் கூறினார். கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் கூடம் ஒன்றின் மீது விமானத் தாக்குதல் நடத்தியதாகவும் அவர் மேலும் கூறினார்.இதேவேளை மக்கள் குடியிருப்புக்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-3)

### இடம் பெயர்ந்த மட்டு...

மக்கள் தங்கியுள்ளனர்.

இவர்களை அவசரமாக அவர்களது பகுதிகளில் குடியேற்றுவதற்கு என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் ஏற்கனவே மீள்குடியேறிய வாகரை பிரதேசத்தில் எதிர்கால அபிவிருத்தி மற்றும் மக்களுடைய வீடமைப்பு தேவைகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக கலந்துரையாடப்பட் டது.

அப் பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதுடன் மிதிவெடிகளையும் அகற்றவேண்டி உள்ளது. இவ் மக்களை யூலை 31 ஆம் திகதிக்கு முன் மீள குடியேற்றப்படவுள்ளதாகவும் இது தொடர்பாக 21 ஆம் திகதி தொடக்கம் எப் பகுதிகளிலும் மீள் குடியமர முடியும் என்பது தொடர்பாக அறிவிக்கப்படுவதாக அக் கூட்டத்தில் முடிபெடுக்கப்பட்டதாக அவர் மேலும் கூறினார். (ச-3,5)

## மரண அறிவித்தல்

### கனகர் கிருஷ்ணபிள்ளை (இராமமூர்த்தி)
### (ஓய்வுபெற்ற சிரேஷ்ட ஆசிரியர்)

கரணவாய் கிழக்கு 'திருமாநிதி' பாடசாலை வளவைச் சேர்ந்த கனகர் கிருஷ்ணபிள்ளை 18.04.2007 புதன்கிழமை இயற்கை எய்தியுள்ளார். அன்னார் காலஞ்சென்ற அசையாமணியின் அன்புக் கணவரும், வைத்தியகலாநிதி பாலசுப்பிரமணியம் (B.A.M.S) (Sri lanka), திருமாமணி ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

க.கணேசமூர்த்தி (பிரதேச செயலகம் மருதங்கேணி), பா.ஜமுனா ஆகியோரின் அன்பு மாமனாரும், கஸ்தூரி, கௌதமன்,காயத்திரி, (மாணவர்கள் யா/விக்னேஸ்வரா கல்லூரி கரவெட்டி),பபிதா,பைரவி, பாரதி (மாணவிகள் யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற துரை-லட்சுமி, தங்கவேல்-செல்லம்மா, ஆகியோரின் சகோதரனுமாவார்.

இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று வியாழக் கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இவ் அறி வித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'திருமாநிதி'
பாடசாலை வளவு,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

தகவல்
குடும்பத்தினர்.

(C-010)

### டெய்லிமிரர்...

தத்துடன் காணப்படுகிறார் என வும் கருணா குழுவினரின் நடவடிக்கைகள் கிழக்கில் இடம் பெயர்ந்த மக்களின் நிலை தொடர்பாக டெய்லி மிரர் அண்மைக்காலமாக பல கட்டுரைகளை வெளியிட்டு வந்திருந்திருந்ததெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஊடகவியலாளர்களின் சுதந்தி ரங்களில் தலையிடுவதாக அனைத்துலக ஊடகவியலாளர்கள் கண்காணிப்பகம் அர சாங்கம் மீது குற்றம் சுமத்தியிருந்தது.

மௌபிம, சண்டே ஸ்ராண்டட் போன்ற பத்திரிகைகளை வெளியிடுவதற்கு எதிராக அரசாங்கம் அழுத்தங்களைப் பிரயோகித்திருப்பதாக பிரான்ஸ் நாட்டை தளமாகக் கொண்டியங்கும் சுதந்திர ஊடகக்குழுவும் அண்மையில் அரசாங்கத்தைச் சாடியுள்ளது.

இந்த இரு பத்திரிகைகளின் வங்கிக் கணக்குகளை அரசாங்கம் முடக்கியதில் இருந்து இவை தமது வெளியீடுகளை நிறுத்தியுள்ளன. (எ-5)

### அரசின் மீதான அழுத்தத்தை...

சுட்டிக்காட்டியிருந்தார்.

பாப்பரசரின் இவ் அழைப்பை அடுத்து இலங்கை அரசாங்கத்தின் மீதான சர்வதேச அழுத்தம் மேலும் அதிகமானது. சர்வதேசத்தின் வேண்டுகோளுக்குப் புறம்பாக ஏ-9 நெஞ்சாலை தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கின்றமை,தொடர்ந்தும் இடம் பெறும் நீதிக்குப் புறம்பான கொலைகள்,ஆட்கடத்தல்கள், மக்கள் இடம்பெயருமாறு நிர்ப்பந்திக்கப்படல் என்பன இலங்கை மீதான சர்வதேச கண்டனங்களை அதிகரிக்கச் செய்துள்ளன.

அண்மைக்காலமாக சர்வதேச மனித உரிமை அமைப்புக்களால் அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்கள் உலகக்கிண்ண அரங்குகளில் சர்வதேச மன்னிப்புச் சபையின் அரசாங்கத்திற்கு எதிரான பிரசாரம் என்பன அரசாங்கத்துக்கு நெருக்கடியைக் கொடுத்து வருகின்றன.

இந் நிலையில் சர்வதேச அழுத்தங்களை தளர்த்திக் கொள்ளவும் தம் மீதான சர்வதேசத்தின் அபிப்பிராயத்தை மாற்றுவதற்குமே ஜனாதிபதி வத்திக்கானுக்கு விஜயம் மேற்கொண்டு பாப்பரசரை தரிசிக்க முடிபு செய்துள்ளார். (ச-5)

### இனப்பிரச்சினைக்கான அரசியல்...

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண அடிப்படையான சில ஆலோசனைகளை முன்வைத்துள்ளார்.

அதேவேளை தமிழர் விடுதலைக்கூட்டணி இந்தியா அமைப்பு முறையில் அரசியல் தீர்வு எட்டப்படவேண்டுமெனவும் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் சமஷ்டி முறையிலான தீர்வினை வலியுறுத்தியுள்ளதாகவும் ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் பத்மநாபா அணி,விரிவான ஒரு அரசியல் தீர்வுத்திட்டத்தை அனைத்துக் கட்சிக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளதாகவும் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்த நிலையில் 60 ஆண்டுகளாக நீடித்து நிலவும் இனப்பிரச்சினைக்கு தற்போதைய தருணத்தில் நிரந்தர தீர்வுகாண்பதற்காக செயற்பாடுகள் துரிதப்படுத்தப்படவேண்டும். மூன்று தசாப்தகால யுத்தம் வன்முறைகளினால் உயிரிழப்புக்கள் மற்றும் சொத்து அழிவுகளால் மக்கள் மிகவும் களைப்படைந்துவிட்டனர். இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்றை எட்டுவதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளிக்கவேண்டும்.

ஜனநாயகத்தையும் சமாதானத்தையும் அமைதியையும் நேசிக்கும் சாதாரண தமிழ் மக்களின் ஏக்கமும் இதுதான் என அவை கூறியுள்ளன. இந்த வகையில் சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்ந்தளிப்புக்கு ஏற்புடையதாக நாட்டின் அரசியல் அமைப்பில் தீவிரமான மாற்றங்கள் அவசியமானதாகும்.

ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் வடக்குக் கிழக்கில் வாழுகின்ற மக்களே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளமையினால் இந்த பகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வை இணைந்த வடக்குக் கிழக்கு நிர்வாகத்தின் மூலமே காண முடியுமென உறுதியாக நம்புவதாக அந்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் ஆரம்பமாகி மக்கள் இடம்பெயர முன்னர் வாழ்ந்த பகுதிகளில் இன, மத, பேதமின்றி மீள்குடியமரவும் இந்தமுறை வழியேற்படுத்தும்.

இலங்கை பல்லின, பல்மத, மொழி, கலாசாரங்களைக் கொண்ட நாடாகவும் இலங்கையின் இறையாண்மைக்கு ஆட்சி அதிகார அங்கங்களான மத்திய,மாநில அரசியல் நிர்வாக கட்டமைப்புக்களில் இன சமூகங்களின் விகிதாசாரம் கருத்தில் எடுக்கப்பட்டு பிரதிநிதித்துவங்களோ, நியமனங்களோ மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் கோரியுள்ளன.

இதற்கு தேர்தல் சீர்திருத்த ஏற்பாடுகளிலும் இந்த விடயம் பிரதிபலிக்க வேண்டுமென சுட்டிக்காட்டியுள்ள மூன்று தமிழ்க்கட்சிகள்,அதிகாரப் பகிர்ந்தளிப்பு செயற்பாட்டினூடாகவே ஐக்கிய இலங்கையில் சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கி கட்டியெழுப்ப வேண்டுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-3)

### விடுதலைப்புலிகளின்...

கவர்ந்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளாலும் இதற்கு ஆதரவு வழங்கப்பட்டு வருகின்றது. அரசாங்கம் சர்வதேச தரப்புக் களுடன் மனித உரிமை தொடர்பாக பேசி வருகின்றது.

அரசாங்கம் இன்று தன்னால் இயன்றளவு நல்ல நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. எனவே அதனை பலர் பாராட்டியுள்ளனரே தவிர குறைகூறவில்லை. அரசாங்கம் பொறுப்பில்லாமல் நடக்கவில்லை. மன்னிப்புச்சபையின் போராட்டத்திற்கு யாரும் ஆதரவு வழங்கவில்லை என்றார் அவர். (ச-5)

### புதிய...

அரசாங்கம் ஒன்று ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை எனவும் அந்த அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். எவ்வாறாயினும் புதிய தேர்தல் முறையின் அடிப்படையில் சிறுபான்மையின மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதை தடுப்பதற்காக செனற் சபை ஒன்றையும் அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

குறித்த செனற் சபையினை அமைப்பதற்கான யோசனையினை சர்வகட்சி குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் அனுமதிக்காக முன்வைக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (ச-5)




இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.04.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.